

# குருவருண்மகிமை

சோமசுந்தரம்

உ

# குருவருண்மகிமை

*சோமசுந்தரம்*

# முன்னுரை

''நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்'' என்றனர்.

சித்தாந்த சாஸ்திரத்தை குறட்பாவடிவில் தந்த சந்தான குரவர் உமாபதி சிவாச்சாரியார்.

எழுதாமறை என இயம்பப்படுதலால் செவிவழிப் புக்கதே வேதம் என்றறிக.

இற்றை நாட்களில் செவிப்புலன் வாயிலாக வந்தவற்றை உற்றுநோக்க யாருமிலர். எனினும் யாம் பெற்ற அறிவு அங்ஙனமேயாம்.

எம் குருநாதர் ஓதத்தக்கன ஓதுவித்தல், பேசத்தக்கன பேசுவித்தல், அறநெறி புகட்டுதல், அந்நெறி நிற்க வைத்தல், காணுதற்கரியன காட்டுதல் போன்றவற்றை நீர் கலந்த பாலில் அன்னம் நீரை விலக்கி பால் உண்ணும் வண்ணம் ஜீவன உபாயங்களை விலக்கி சிவானுபவங்களைப் பரப்பினார். அவைகளைத் தெரிந்த வரையில் எழுதவிழைந்தேன்.

கவிஞர் கண்ணதாஸன் தனது ''அர்த்தமுள்ள இந்துமதம்'' என்னும் நூலில் ''எத்தனையோ சாஸ்திரங்கள் புராணங்கள் இருக்க ஏன் நான் இதை எழுதுகிறேன் என்றால் அவை என் போன்றவர்களுக்கு நான் எழுதுபவை உன் போன்றவர்களுக்கு'' என்றார். அஃது காலத்தின் தேவை என்றவாறே.

அருள்நெறி பரப்பிய அண்ணல் கிருபானந்தவாரியார் காய்கறிகளில் உள்ள சத்துணவை உண்ணாது 'வைடமின் மாத்திரை' விழுங்குகின்ற காலம் என்றார் - அவசரமான உலகம் நோக்கி.

இவற்றை மனதில் பதிய வைத்ததன் மூலம் பதிபக்தியாலும் குருபக்தியாலும் யாம் அறிந்தவற்றை எம் பிற் சந்ததியினரும்

அறியவேண்டும் என்ற எண்ணத்தாலும் இவற்றை எழுதத் தோன்றிற்று.

இங்கே குறிப்பிடப்படுபவை குருநாதர் விளக்கியவையும்; அவரது செய்கைக்கான காரணங்களை தும்பளையில் பிறந்து ''புதுக்குளம் சாமியார்'' எனப் போற்றப்பட்டு, செல்வச்சந்நிதி முருகன் வாயிலில் உடல்நீத்த முருகேசு சுவாமிகளும் எமது குலகுருவும் விநாயகர் கருணை மிகப் பெற்றவரும் தற்புருட தேசிகர் இடத்தில் சித்தாந்த சாஸ்திரம் கற்றவரும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்தக் குருக்களும் சிதம்பரத்தில் திவ்ய தரிசனம் பெற்றவரும் வித்தகம் என்னும் ஆஸ்ரமம் அமைத்து அறநெறி வளர உழைக்கும் குருமணி பரமசாமி அவர்களும் அவ்வப்போது அறிவுரை சொல்லும் பேரறிஞர் சைவசித்தாந்த முதுமாணி வ.ஆ.தங்கமயில் அவர்களும் தந்த விளக்கங்களாமே.

குருநாதர் எளியேனுக்கு 'சோமசுந்தரம்' என தீட்சாநாமம் சூட்டினர்.

எமது பிதாவழி ஆறு தலைமுறைக்கு குலதெய்வமாயுள்ள கருணையம்பதி மூத்தநயினாரும் மாதாவழி நான்கு சந்ததிக்கு குருவாயுள காரைதீவின்கண் (காரைநகர்) கலங்கரை விளக்கருகே 'ஆலவாய்' ஆஸ்ரமத்தில் அறம் காத்த சுவாமி முருகேசரும் எமது இரு கண்களே என்பதால் இப் பாடல்களின் கண் இருவழியும் இணையலாயிற்று.

இதன் பிரதிகள் பரிகசிப்பவர் கண்களில் படாமல் கற்பவர் கண்களிற்கு விருந்தாய் அமைய விநாயகரையும் குருநாதரையும் வேண்டி நிற்கின்றோம்.

சோமசுந்தரம்

# அணிந்துரை

'குருவருண்மகிமை' என்னும் நூல் குருபக்தியின் அர்ப்பணிப்பாக உருவாகியுள்ளது.

காரைநகரில் ஆலவாய் ஆச்சிரமத்தில் வாழ்ந்தவரும் சமாதி வடிவில் இன்றும் விளங்குபவருமான 'பேப்பர்' சுவாமிகள் எம் தவப் பயனால் அறியப்பெற்றவர் என்பதே உண்மை.

இவரின் சிந்தனைகளாக உருவாகியுள்ள இந்நூல் பேப்பர் சுவாமிகளின் ஞாபகத்தை உண்டாக்குவதாகவும் அவரை அறியாதவர்க்கு அவரை அடையாளம் காட்டுவதாகவும் அமைந்திருக்கின்றது.

சுவாமிகள் இரு தடவை தன்னைப் புகைப்படம் எடுக்க விரும்பவில்லை - அனுமதிக்கவில்லை என்ற செய்தி இந்நூலில் தெளிவாக உள்ளது. ஆனால் பட்டினத்தார் சமாதியிலும் கங்கையில் மாளவியா என்ற பெரியாருடனும் தேவதாஸ் காந்தியுடனும் எடுத்த படங்கள் மட்டும் உள்ளன. இப் படங்களும் அவர் பாடல்களும் தனக்குப் பின்னரும் அன்பர்க்கு உதவும் என்றே அவர் அனுமதித்துள்ளார் எனக் கருதுகின்றேன்.

சுவாமிகள் படம் - பாடல் என்பன மட்டும் அன்றி திருவெம்பாவை - கோளறு பதிகம் என்பன அவர் குரலாக இருந்தன. இவை பலரை உய்யக் கொள்ளவல்லன. உய்யும் புண்ணியம் வளரவேண்டும் - வளர குருபக்தியும் பதிபக்தியும் உதவும் என்பது உறுதி.

சுவாமிகளின் நினைவுகளை எழுத்தில் வெளிப்படுத்தும் முயற்சிக்கு நன்றி நன்றி.

பண்டிதர் **தி. பொன்னம்பலவாணர்** சமாதான நீதவான்
பொன்னாலை.

[illegible]

1 [illegible]
[illegible]
[illegible]


[illegible]

2. [illegible]
[illegible]

[illegible]

3. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] | [illegible]



## குருநாதரின் பாடல்கள்

காகவடிவு கொண்ட கணபதியை நீயென்றும்
தாகமுடன் தொழின் தருவான் சிவஞானம் - போகம் மோட்சம்
இரண்டும் தரும் சிவன் மகனிவன் நம் ஔவையைத்தன் ஞானக்
கரத்தால் தூக்கி வைத்தான் கயிலாயம்.

வில்வம் தனைத்தொழ வில்வகேசன் முன்னின்றருள்வன்
வில்வம் தனைத்தொழ விட்டுவிட்டோடும் நம்மும்மலங்கள்
வில்வம் தனைத்தொழ வீடுபெறுவது திண்ணம் திண்ணம்
வில்வ மரத்தின் கீழிருந்துய்ந்தேன் காண் வினையேன்யான்.

கொன்றைதனைக் கும்பிடக் குன்றிக்கெடும் நம்வினைகள்
கொன்றைதனைக் கும்பிட இல்லைஇல்லை இருட்பாவைக் கொடுமைகள்
கொன்றைதனைக் கும்பிட வாய்க்கும் சிவஞானச் செல்வம்
கொன்றைதனைக் கும்பிட்டுப் பெற்றேன் நான் ஞானநிட்டைச் செல்வம்

ஒருகாலும் ஆகாது பொய்சொல்லிப் பொருள்தேடல்
ஒருகாலும் ஆகாது உள்ளொன்றுவைத்துப் புறமொன்றைப் பேசுதல்
ஒருகாலும் ஆகாது ஒழுக்கமில்லா மக்கட் செல்வம்
ஒருகாலும் ஆகாது உத்தமஞானியை இகழும் தீமை.

மோட்சம் வேண்டேன் சிவனே மூவர் தேவாரம்,
முழுவதுமுணர்ந்த மணிவாசகன் திருவாசகம்
தரும் பேரின்பம் என் அறிவில் இருக்கையில்
இம்மையிலே

காட்சி காண்பான் காட்சிப் பொருளாய் நிற்கும் நீ
தரும் ஞானத்தால் உனைக் கண்டுன்னில்
மிக முயங்கி நிற்பதன்றே சச்சிதானந்தம்

வீட்டைச் சேர நினையாமல் காட்டைசேர வழிதேடி
பாவம் செயும் பாவிகள் வாழ்நாடு அடவி
காடென்றார் வாகீசர் இவர்க்கெட்டுமோ தமிழ்
வேதம் தரும் இன்பம்

பாட்டு விரும்பி நீ, கேட்ட வரமெலாம் நால்வர்க்
கீய்ந்தாய் எனைப் பாடப் பணியாயோ பண்
கசிந்துருகி பாட விதி வரின் ஒரு குறையு
மெனக்கிலையே.

சிவலோகம் தன்னை வேண்டேன் சிரஞ்சீவியாய் வாழும் கதி வேண்டேன் சிவனடியார் எல்லோரும் தேடும் சச்சிதானந்தனை வேண்டேன் சிவாயநம என நினைந்து நீறணிந்து சிவபூசை செயும்

தவத்தோர் யார்க்கும் அணிகலமாய் என்றும் விளங்கும் நால்வர் தேவார திருவாசகமெனும் திருமுறைகளே நான் வேண்டி நித்தம்பாடி அருளால் உணர்ந்து மகிழும் ஞானச் செல்வம் சைவசமயத்திலே.

பவக்கடலைத் தாண்டுவார்க்கு திருவாசகமே பக்குவமான தோணியாய் நின்று கரைசேர்க்கும் பழுத்த மன நந்தியன்றோ வாசகனாய் பிறந்து சொன்னார் திருவாசகம்.

சவத்திற்கு உயிர்வரப்பாடி சர்வான்மாக்களும் ஈடேற திருவிளையாடல்கள் பல செய்த மூவர் தேவாரங்களும் சர்வஞ்ஞத்வம் தரும் திருவாசகமும் வேதாகமங்களின் சாரமன்றோ மாந்தர்காள்.

முத்தி வேண்டேன் முனிவர் ரிஷிகள்
தம் பதம் வேண்டேன்
சித்தி வேண்டேன் சிங்காசனம் ஏறி
உலகாளும் பேறு வேண்டேன்
எத்தவத்தோர்க்கும் மேலாய் ஞானம்
பெற்றெமை ஈடேற்றும் மணி
வாசகனாம் நால்வர் சொன்ன
பக்திதரும் பண்கள் தமை பாடி நாளும்
பரமானந்தம் காணும் கதியொன்றே வேண்டுவனே.

## சீடரைப் பற்றி

**கண்டதில்லை இவளைப் போல் கடவுளைத் தேடும் தபோதினியை
சண்டி போலன்றோ செய்வாள் சிவபூசை - தொண்டர் மகிழும்
ஆலவாய் ஆஸ்ரமத்தில் அருந்தவம் செயும் எம் அம்மை
விசாலாட்சியை
மாலயனும் போற்றுவர் என மதி.**

உ

## அதிகாரம்

சித்தம் தெளிந்தவர் சிறந்த மெஞ்ஞானி
புத்திரன் நீயென பகன்றதன் வகையால்
புத்தியில் வந்ததும் புலன்வழி வந்ததும்
பத்தியால் பகன்றதும் அவர் தருஞானமே.

***

கற்றறியேன் கலையறியேன் கவையறிவேன்
பற்றற்ற பரமஞானி பாதமலர் பற்றினேன்
பற்றியதால் பாவவினை பாற்றினார் ஆக
சொற்பதம் கடந்த சீரடிகள் பரவினேன்.

நூலறியேன் நுண் கலைகள் தானறியேன்
நாலறிந்த ஞானிபதம் தானறிவேன் ஆக
நானறிந்த நன்மைகளை நவில்கின்றேன்
வானறிந்த ஞானிபுகழ் ஓங்குகவே வையமெலாம்.

# குருவருண்மகிமை

நற் குஞ்சரக் கன்று நண்ணிற் கலைஞானம்
கற் குஞ்சரக்கன்று காண்.

## கணபதி சரணம்

1. கருணைக் கணபதி திருவடி சரணம்
திருநந்தி தேவர் திருவடி சரணம்
திருமூல நாயனார் திருவடி சரணம்
திருவருள் விளம்ப குருவருள் அபயம்

## குரு தரிசனம்

2. அண்டி அணைந்தது கலங்கரை விளக்கு
தொண்டர் தமக்கொரு கலங்கரை விளக்கு
அண்டிய நமக்கொரு கலங்கரை விளக்கு
தாண்டிட பிறவிக்கடல் கலங்கரை விளக்கு

3. சாண்துணி அணிந்ததொரு சாந்த விளக்கு
வீண்பழி வினைகளை விலக்கிடும் விளக்கு
காண்பவர் கண்ணுக்கு ஞான விளக்கு
வாணாள் விளங்க வந்தணைந் தோமே.

4. குரு நாமம் செப்பிட குறைகள் தீருமே
குரு நாமம் செப்பிட கோள்வலி குன்றுமே
குரு நாமம் செப்பிட கூற்றும் அகலுமே
குரு நாமம் செப்பிடில் குவலயம் வாழுமே.

5. குருவைக் கண்டவர் தன்னைக் கண்டவர்
குருவைக் கண்டவர் தலைவனைக் கண்டவர்
குருவைக் கண்டவர் விதியை வென்றவர்
குருவைக் கண்டவர் கைலை சேர்வரே.

6. குருமதி கொண்டவர் உத்தம சீடரே
குருமதி கொண்டவர் கோபுர தீபமே
குருமதி கொண்டவர் குவி விதி காண்பவர்
குருமதி கொண்டவர் விதி வலி வெல்வரே.

7. வடபால் ஈழ குடதிசை தனிலே
கடல்சூழ் தீவு ஏழுள அதிலே
கடல்படு தொழிலும் கடல்வழி வணிகமும்
படர்வயல் நெல்லும் பலதானியமும் விளைந்தனவாக.

8. நாகபூசணி அம்மை நயினையில் நீடுளார்
நாகபூசணி திருநோக்கில் புனிதமானது புங்குடுதீவு
ஆயதீவு அனலையில் ஐயனார் ஆட்சி
ஆயநெடுந் தீவில் அரசர் கோட்டைகள்.

9. வேல் அணை தீவில் வேளாண்மை சிறப்பு
மால் அணை கோவில் மருங்கொரு தீவு
சால் தவ குருமணி உதித்த காரைதீவு
மேல் ஒரு தீவு எழுவை தீவுமுள.

10. முன்னைசெய் தவப்பயனால் வேலாயுத முதலியாரும்
நன்மைசெய் தில்லைவனம் அம்மையாரும் நாடுவாழ
ஈன்றெடுத்த முருகேசர் ஞானியாய் நம்குருவாய்
தான்கருணை நயந்திருந்தார் 'ஆலவாய்' பதியிலே.

### **திரு அவதாரம்** (1901)

11. பிலவ வருடம் பிறைநுதல் அருளால்
தலமது விளங்க தாயுளம் மகிழ
ஆவணி மாதம் மதிவளர் சதுர்த்தியில்
சீலமிகு சித்திரையில் சீலர்திரு அவதாரம்.

12. ஆயதனுலக் கினத்தில் குருஆட்சி செய்யஅதில்
தூய வனாம்கேது சனியுடனே சேர்ந்தமர
மேய வளர் சந்திரனும் செவ்வாயும் கன்னியிலே
சாயா கோளிரண்டிற்கும் ஒருபுறத்தே ஏழுகோள்கள்.

13. சூரியனார் ஆட்சிசெய சுக்கிரனார் உடனிருக்க
பாரினிலே ஞானி முருகேசர் அவதரித்த போதினிலே
ஏழிற் கருநாகம் நட்புடனே அமர்ந்திருக்க
ஏழு,பத்திற் கதிபதியார் எட்டினிலே மறைந்திருந்தார்.

14. கல்வியுடன் பெருஞ்செல்வம் ஈட்டியவர்
நல்லறமாம் இல்லறத்தில் முப்பத் திரண்டு
வல்லதவம் தாமியற்ற ஓர் எட்டு
சொல்லரிய செயலாற்ற முப்பத் தைந்தாண்டு.

15. சித்திரைத் திங்கள் இருபதாம் நாளில்
பத்தினியார் பாக்கியம் பாரவுடல் நீக்க
உத்தமியின் முறைமைகள் முடித்து உடனே
சத்தமின்றி தவமுறை பற்றினார் தாமே. (1932)

16. 'தனித்திரு' 'பசித்திரு' 'விழித்திரு' என்றே
பனித்த சடையனை நெஞ்சகத் திருத்தி
கனிந்த தவமே கவசமாய் காவல்செய
தனித்தே இருந்தார் தனது ஆஸ்ரமத்தில்.

17. கருவில் வைத்தவர் ஞானி முருகேசர்
உருவை வளர்த்தவர் கணபதி நேசர்
மருவி வளர்த்தவர் சித்தர் முருகேசர்
சரவண பவகுக செப்பிய சித்தர்.

18. என்குரு நாதர் எனதருந் தந்தை
எனக்குரை செய்தவை பலப்பல
எனினும் உரைத்த வார்த்தைகள் ஒருசிலவாமே
என்னிலை அறிவித்து இயம்பிய வகையே.

9. தருண மிதுவென தானே யுணர்ந்து
அருண கிரியவர் தாரணி வந்ததும்
பெருந்தவப் பட்டினத் தடிகள் போலவே
கருவினை வைத்த வகையறி வித்தனை

20. ஒரு நாள் உரைத்திவை சிலநாள் செல்ல
மருவிய சமாதியுள் உறைந்தபின் யானே
தெரிந்ததென் பிறப்பின் சூட்சுமம் அதனை
அறிவித் தெனையவர் ஆட்கொண்ட வாறும்

21. ஆலவாய் ஆஸ்ரமம் அமைத்து அங்கே தவமியற்றி
சீலமாய் சிறப்பாய் உறைந்த சுவாமி முருகேசர்
ஆலமரமது ஆம்புள்ளிற்கு அமைவிட மானாற் போல்
ஓலமிட்ட அன்பரை ஏந்தியே காத்திட்டார்

22. ஓலமிடும் கடற்கரையில் ஓலையினால் கோயில்
தாலம் ஓலையினால் தாங்குமொரு வேலி
சீலமிகு சிவபூசை ஓமம் பார்த்தக்கால்
பாலமதாகவே பிறவிக்கடல் தாண்டிடலாம்

23. ஓலையால் வேய்ந்த உயர் ஆஸ்ரமத்தில்
வாழை இலையில் வந்து அமுது உண்டாரும்
நோயை நீக்கிட திருநீறு பூண்டாரும்
தாயை நாடிய சேய்களாயானார் அங்கே

24. சரவண பவகுக, சத்குரு சங்காரம்
சரவண பவகுக சிவயநம - சிவ
சரவண பவகுக, செபித்திட வாக்கில்
சரவண முருகன் வந்துதிப்பானே.

25. உதித்தவன் அருளாலே தாயுமாய் ஆனாரே
பதித்தமந் திரத்தாலே தடைபல நீக்கினார்
விதிக்குமே விபூதி விழைத்து அருளினார்
கதிக்கு கல்லினையே நீறாக்கினார் தாமே

26. தாமே தனியாக இருந்து அறமதனை
ஓம சிறப்பதனை காண அருளினையே
தூமம் சிறந்தாலே துன்பம் வீடுமே
தீமை அகலுமென்று சித்தம் தெளிவித்தார்.

27. தெளிவு குருவுரு சித்தமதே
தெளிவு சரவண பவகுக சித்தரதே
தெளிவு சிவசரவண பவகுக பக்குவமே
தெளிவு சரவண பவகுக சிவயநம சக்கரமே

28. ஏக தந்தம், ஏகாட்சரம்
நாக பந்தனம் நம்மைக் காத்திடுமே
பூத நாதர் பூரண யோகமும்
ஓத நாவும் நாடியும் சிறக்குமே.

29. ஓத நல்லாள் நாவில் இருப்பள்
பாட நல்லாள் பாவில் உறைவள்
தேட நல்லாள் தெளிவு தருவாள்
நாட நல்லாள் சரசுவதி யாமே.

30. யாமே சரணடைந்தோம் கற்பகக் கணபதியை
ஓம வியாபகமாகி எங்கும் நிறைந்தவர்
நாப ஜெபத்தில் நயந்து உறைபவர்
பாப நாசம் பண்ணுவர் இவரே.

31. இனிய கணபதியை இமையோர்க் கதிபதியை
கனியு மனத்துடனே கூவி அழைத்திடவே
தனிய மனத்துறைவர் வல்லபை மணாளர்
பணிய பதமருளும் கருணைக் கணேசர்

32. கணேசர் பதிகளில் கருணை பொழிவார்
குணேசர் மதிகளில் தெளிவு தருவார்
பணவாசை பறந்திட பக்குவம் தருவார்
மணியோசையாலே வினையோட்டி நிற்பார்

33. நின்றுன்னைத் தொழுவோம் நினைவோம்
அன்று என்னைத் தொடரும் வினையை வீட்டுவோய்
பொன்ற கொன்றையடி நயந்த கோவிலையே
இன்று நினைந்தழுது இயம்புவோம் புகழையே

34. புகழ் பூத்த கொன்றையின் அருகிருந்து
திகழ்ந்த திருக்கோயிலை இன்று
நினைந்தேத்த வைத்தனையே என்றும்
நினைய வொண்ணா வெகுநிதியே கணபதியே.

35. நிதியே கருணைக் கடலே தேவ
நீதியே நினதென்ற வகையே உணர்தினை
பதியே கருணையம் பதி விநாயகனே
கதியே நீயருள்வாய் சரணம் யாமே

36. யாமா சரணடைந்தோம் நற்கதி யுன்னருளே
ஓமென ஓதியே உன்திருநாமம் தருப்பணம்
ஆதியன இயற்றிடும் அம்புவி மாந்தருக்கு
தாமத மின்றியே தான்வரு மூலனே

37. மூலாதாரத்து முழுமுதலே மூத்த விநாயகனே
ஆறாதாரத்தை இயக்கும் அரும்பொருளே
தேறா நெஞ்சமதை தேற்றி யொளியேற்றி
சீராய் நகர்வித்தாய் சித்தி விநாயகனே

38. விநாயகனே என்றிட விட்டகலும் வினையாவும்
விநாயகனே என்றிட விளங்கிவரும் திருவுருவம்
விநாயகனே என்றிட கூடிவரும் சித்திகளும்
விநாயகன் திருவுருவை விநயமாய் நினைந்தக்கால்

39. நினைந்தக்கால் வந்து நிழலுருக் காட்டி ஒளிகாட்டி
நனைந்தக்கால் திருவருளின் தெளிவு நிலைகாட்டி
யுனையல்லால் திருவில்லை பொருளில்லை பொலிவில்லை
வினையில்லை பிறப்பில்லை விளைவாகும் ஒளியேநீ.

40. ஒளியே எழுகோடி மந்திரத்தின் முடியே
கதியே நீயென்று நினைத்த மாத்திரத்தே
மதியே நீயென்று மனத்துள் ஏகினையே
விதியே நீயாக விழைந்தது பேரின்பம்.

41. இன்பமே சூழ இளையோர் மனம்நாட
துன்பமே ஓட துதிசெய் கணபதிஓம்
தன்னலம் தேடாமே சரணாகதி யடைந்தால்
பொன்னல பேறெல்லாம் துறந்திடல் எளிதாகும்

42. எளிய மனத்துடனே ஏரம்ப கணபதிக்கு
தெளிய மனத்துடனே தேவர்வரும் பதிக்கு
ஒளிய இடமின்றி ஓடி வந்தோமே
பணிய திருவடியே பதமாய் அருள்வாயே

43. வாயே ஓயாமல் வழுத்துவோம் உன்னை
நோயே ஓயுமால் ஒன்றிய மதத்துடனே
வாயே மௌனமாய் வரமருளும் பேறாலே
சேயேன் மொழிந்தன நின் வரந்தானேயாகும்

44. ஆகும் பொருளெல்லாம் அரிய கணபதியே
போகம் பொருளில்லை பேரருள் பொருளாமே
நாவும் சோராமல் நயந்தக்கால் உன்னை
பாவும் சரியெனவே பகர மாட்டாயோ

45. யோதி உருவானே ஓதிய மந்திரத்தால்
போதி உணர்வரிய ஓங்காரப் பொருளதனை
சோதி நீ வந்தால் சோர்வெலாம் போக்கி
நாதன் கழலிணைகள் நண்ணல் எளிதாமே

46. எளிதாகும் அண்டியவர்க்கு அவர்கருணை
எளிதாகும் மூத்த விநாயகர் கருணை
பொழுதைக் கழியாமல் அடியை வருடுவோம்
பழுதைக் கழித்தேநின் பதமே அருளுவையே

47. அவையே அறியேன் யான் அஞ்ஞானம்
அவையே அறிந்திருந்தேன் மெஞ்ஞான
சுவையே அறிவித்து சுருதி உணர்வித்து
கவையே அறுவித்து கருத்தில் உறைந்தனையே

48. உறைந்ததனால் மனத்துள்ளே ஊழின் வலுநீக்கி
நிறைந்த தண்ணருளால் தாமரையிலை நீர் வாழ்வை
உரைத்த மந்திரத்தால் ஊரார் கவைநீக்க
சிரத்தை சிந்தனையில் சீராய் நிறுத்தினையே

49. நிறுத்தினை மூலாதாரத்தில் மூண்ட கனலதனை
நிறுத்தினை ஆறாதாரத்தில் நின்றே செயலாற்ற
நிறுத்தினை பாமதியில் பயந்தன நீயாமே
நிறுத்தினை உடலின்கண் சஞ்சிதம் மறைந்ததுவே

50. மறைந்தது சஞ்சிதமால் நினைந்தது உனை மனமே
நிறைந்த மனத்தினால் நிற்சலனம் நீயுணர்த்தி
உரைத்த மாத்திரத்தே ஊழ்வினை மாய்க்கின்ற
பரத்தை பாடியே பணிந்தேன் எந்நாளும்

51. நாளும் பொழுதுமுனைத் தொழுமடியார் சோராமல்
கோளின் பொழுதெல்லாம் போக்கித் திருவருளே
நாளும் துணைநிற்க வாழும் வகை அருள்வாய்
வேளின் சோதரனே வேழமுகத்தப்பா.

52. பாலில் நெய்போல நாயேன் மனத்துறைந்து
தோலின் மறைப்பாலே துவண்ட வகைநீக்கி
நூலின் நயம் காட்டி நுகர்வே நீயாகி
காலில் பணிந்திடவே கருணை யானவனே.

53. ஆனவனே மூவுலகும் தானவனே நவநிதியே
போனவைகள் பிறவிகளும் பிறவினையும்
ஆனவைகள் திருவருளும் சித்திகளும் முத்தியுமே
வானவர்கள் வந்திறைஞ்சும் திருத்தலமும் நீர்ச்சுனையும்

54. நீர்ச்சுனைகள் நிரம்பியுள தீர்த்தமாய் ஊருணியாய்
ஆர்த்தவொரு அரசமரம் அதனுடனே வேம்புபுளி
சேர்த்துள இலுப்பை மரம் நிரையான மூங்கில்கள்
சேர்ந்த மணமண்டபம் கல்விச் சாலையுள.

55. உளமே கொள்ளாதார் ஒருகால் வந்தக்கால்
தலமே நாடிடுவார் நயந்த திருவருளால்
உலகே துதிக்கின்ற ஊர்த்துவ கணபதியை
வலமே வந்திறைஞ்ச வல்லவினை மாயுமே

56. மாயுமே பொல்லாத குணமெல்லாம் உள்ளமதில்
பாயுமே நல்லெண்ணம் நன்மைகளும் கூடுமே
நாயேனை ஆட்கொண்டாய் நல்ல நெறியாலே
தூயேனென் றெனையாக்கி தொழுதெழ வைத்தாயே.

57. தாயே நின்கருணை கண்டவர் பலபேரே
சேயை உன்கரத்தால் தூக்கி வளர்த்தாயே
மாயை அகங்காரம் மனதில் ஒழித்தாயே
தீயைப் போல் எரித்தாய் தீய வினை எல்லாம்

58. எல்லாம் நின்னருளே சொன்னால் தீருமோ
வல்லபை மணாளாநின் வல்லமை வியந்தோமே
சொல்லாத மந்திரத்தால் ஒளியாய் திகழ்வாயே
செல்லாது நின்னடிமை நிலைக்க நினைந்தோமே

59. தோள்மேல் சுமந்தோமே தேர்மேல் இவர்ந்தாயே
தாள்மேல் வீழ்ந்தோமே தண்ணருள் பொழியாயோ
வாள்மேல் நடத்தலொக்கும் நீர்சூழ் புவிவாழ்க்கை
வீழாமே நிமிர்த்தி நிலவக் காத்தருளே.

60. அருளே திருவருளும் அருளே குருவருளும்
அருவுருவும் திருவுருவும் மருவி வந்தக்கால்
கடல்நீர் போல காண்பரிய திருவருளை
குடநீராய்க் கைதருவார் குருவாய் வந்தவரே.

61. வந்தவரே குருவாக எந்தை முருகேசர்
தந்தவத்தால் கருவாக வைத்த கருத்தெல்லாம்
பந்திப் பனுவலாய்ப் பகர வைத்தாரே
வந்தவரோ வழுவாமல் வைத்தார் திருவருளே.

62. திருவருளே கடல்நீராம் உவர்நீக்கிய பின்னே
குருவருளே குடநீராய் வந்துவக்கும் தன்மையினால்
குருவாய் வருவோனின் கழலைக் கைப்பற்ற
மருவாய் மறுபிறவி மாயும் மலமெல்லாம்

63. எல்லாம் பரம்பொருளே என்று இருந்தக்கால்
சொல்லில்லை சுமையில்லை அல்லல் அகலுமால்
பல்லோர் பணிகின்ற பதியில் கணபதியை
நல்லோர் நலம் வாழ நாடிப் பணிந்திடுவீர்

64. ஈரேழ் உலகோரும் ஏத்தும் கணபதியை
ஊரில் முழுமுதலாய் உறைந்த கணபதியை
பாரோர் பணிந்தடையும் பாக்கியம் பலவாகும்
காரேறு முகில்போல கனிந்து மழை பொழியும்

65. பொழியும் மழையாலே பயிர்கள் பயனுறுமே
பொழியும் அருளாலே பயில்வோர் பயனுறுவர்
பொழியும் கருணையால் கருதும் கணபதியை
பொழியும் பேரன்பை பெரிதும் ஏற்பாயே

66. ஏற்பாயே அன்பர் இசைக்கும் ஜெபமெலாம்
ஏற்பாயே அடியார் இயற்றும் தருப்பணங்கள்
ஏற்பாயே ஓமத் திடும் அன்னம்
ஏற்பாயே அன்பைப் பெரிதென்று என்றும்.

67. என்றும் நினைந்தக்கால் ஏதம் இல்லையாம்
நன்று நிலைபெறுமே நாதம் மனத்தெழுமே
நம்பித் தொழுமடியார் மனத்தே நிறைவாயே
தம்பி தொழுதிடவே யானையாய் வந்தாயே

68. வந்தனை செய்கின்றோம் வாரண முகத்தோனே
சிந்தனை நீயாகி சிறந்து வந்தாயே
என்னையும் பொருட்டாக்கி ஏதம் தவிர்த்து
முன்வினை அத்துணையும் கையினிற் காட்டினையே.

69. தில்லையுள் ஆடி திருநடன மாடி
வல்வினை தீர பொதுநட மாடி
வல்லை வந்தெனக்கு ஒரு நடம் காட்டி
எல்லையில் இன்பம் விழைத்த தென்னே

70. மூன்று தாளமும் உன்மணி ஓசையில்
அன்று காட்டியே அருளமு தூட்டி
என்றும் போற்றென எனையுன தாக்கினை
நன்று நன்று நலம்பெறு சிவயநம ஓம்

71. காட்டினார் ஒளிவட்டம் கண்ணாற் காண்பதற்கே
காட்டினார் தவவட்டம் அரிதான சீடர்பால்
காட்டினார் மெய்யன்பின் மேன்மையை இதுவென்று
காட்டினார் ஓயா மாரியாய் சீரிய கருணைதனை.

72. தனை அணைந்த தமியேற்கு தந்தனையே சரணம்
தனதன்பைத் தந்ததனால் அடைந்தோமே சரணம்
முன்வினையை மாய்த்தவரே குருவடிகள் சரணம்
பின்பிறவி ஓய்வித்த திருவடிகள் சரணம்

73. சரண மடைந்தவர் தழைகள் அறுத்து
சரணார விந்தம் அளித்திடும் குருவாய்
மரண மதனை மறுத்து அருளில்
சரண மளித்து விளைத்தது திருவே.

74. திருக்கைலாய சிவனுறை கிரியில்
திருக்கூட்டத்துட் கிரிவலம் வருகையில்
வருதடம் மாறிய அம்மையர் இருவர்
பெருநிலம் வந்தனர் லட்சுமி நாகேஸ்வரியாய்

75. தண்டியடிகளை வேண்டி அழைத்து
நீண்ட கிரியைகள் போன்றன விலக்கி
பூண்ட பிறவித் தொடக்கை அறுத்து
ஆண்டவன் திருவடி நீழலில் வைத்தார்.

76. நீரில் மூழ்கி நினைப் பொழிதலுக்கு
நேரில் ஓர் சாட்சியம் பகர்ந்தார்
ஊருளோர் தொடக்கும் ஞானியை என்றும்
சேருவோர் வழக்கமும் வேறென்றறிய வென்றே.

77. மூன்று பத்து இரவில் விலகும் தொடக்கை
மூன்று நாளிலே விலக்கியே புத்திரன்
மூன்று நாளில் வில்வம் சாற்றென்றே
சான்று பகர்ந்தார் தாயின் நிலைக்கே.

78. நிலையை விளக்கிய நிறைமொழி குருமணி
மலையில் விளக்கென வாழுமெஞ்ஞானி
விலையில் விளக்கம் கூறுவர் தாமே
தலைவனைச் சிதம்பரத்தில் தரிசிக்கும் யோகி.

79. இருவரில் மற்றைய இலட்சுமி அம்மை
புரிதவம் மெச்சியே முத்துமாரி அன்னையை
அரிய துணையாய் அனுப்பிய தன்மை
அரியவர் தவத்திற்கு செப்பிய சான்று.

80. அம்மை விசாலாட்சி இயற்றிய சிவபூசையும்
அம்மை பார்வதி இயற்றிய தவமும்
மங்கயற்கரசியார் தன்மையை ஏந்தியே
மங்கள ஒளிவட்டம் இசைவித்தாரே.

81. நல்ல நண்பனாம் குமரப்பாவினை
அல்லற்படுத்திய பொல்லாத வியாதியை
வல்ல தவத்தின் வலிமையால் நீக்கினார்
வல்ல தன்னாட்சி போராட்ட வீரர்க்கு.

82. அண்ணல் காந்திக்கு அண்மித்தது ஆயுளென
அண்ணளவின்றி கணித்தொரு மடலை
ஆண்டில் பாதி முன்னரே அனுப்பினார்
மாண்டநாள் காலையில் காட்டியது அவர்விதி.

83. காந்தியின் கூடத்தில் கட்டில் வைத்து
சாந்தி யடையவே கலசமும் அஸ்தியும்
சாற்றிய ஆடையும் சாற்றிய பூவும்
ஏற்புடை நெறியில் ஏற்றியே வைத்தார்.

84. இமயம் அருகே போர் மூண்டவேளை
அபயம் அளித்திட சாற்றி ஒருதர்ப்பை
சிவய நமவென எல்லை வகுத்து
உபாயம் செய்து ஊக்குவித் தாரே.

85. நாள் பதினொன்று நலம்பெறு பூசை
வாய் மொழியின்றி வளமாய் ஆற்றி
நாளும் கோளும் நன்மை செய்திடவே
நாள்பதி னொன்றில் வென்றிடக் கண்டார்

86. எழுதியே ஒருமடல் அரசுத்தலைவருக்கு அனுப்பினார் தாமே
எழுதிய ஆசியை ஏற்று கிரி உவப்பெய்தி
எழுதினார் தன்கையால் நன்றியுரை மடல்
எழுதியதை பொக்கிசம் ஆக்கினர் இருவரும்

87. தாங்கியே வளர்த்த தவமிக்க சீடரவர்
ஓங்கிய நிஷ்டையில் நீடித்த வேளையிலே
ஏங்கியே நோயென்று உற்றவர்கள்
ஏகினரே அரச மருத்துவமனை வாயில்.

88. வாயிலிலே வந்தொருகை தடுத்து ''இவர்க்கு
நோயில்லை என்பெல்லாம் சிவலிங்க மாயுளதே
சீடர் நிலை இதுவா மெனில் இவர்
நாடிய குருவின் நிலை எதுவோ" என்றார்.

89. ``பாரடா நான் வளர்த்த கடா இதற்கு
யாரடா யோகன் விலை கூறுதற்கு" என
நேரிய சீடர் அவர் நீடிய நிலை தன்னை
பாருளோர் அறிந்திடவே பகர்ந்திட்டார் தாமே.

90. பெருந்தவ தாயுமானசுவாமிகள் திருநடமாடியை
பெருவிருப் புடனே பூசனைபண்ணி சமாதிஎய்தியபின்
திருமறைக்காட்டு குருக்கள் தாமும் சிலநாள் வணங்கி
குருநாதருக்கு சீடர்கையால் சேர்ப்பித்து சிறப்பித்தாரே.

91. பெரு விருப்புடனே பூசனை பண்ணி
திருவருள் பெருகும் திருவுரு வதனை
வரு சீடருக்கு ஆசிகளுடனே
பெருமையாய் பூசனை புரிகென சமாதி எய்தினர்.

92. சரியை கிரியை யோகம் ஞானமென
உரிய வகையில் தொண்டுகள் ஆற்றிட
பெரிய சமாதி எய்திய பின்னரும்
அரிய சீடர்க்கு அளித்தனர் தாமே.

93. நோயின் பிடியில் அல்லலுற்ற வேளை
தாயின் கருணை தந்த நற்சித்தர்
தாயுடன் சேய்களை தயவாய் தந்தவர்
வாயில் மொழியாய் கூறிய விதியிது.

94. குருவாய் வருபவர் அறுவருக் கேனும்
அரிதாய் பெற்ற ஞானமும் வித்தைகளும்
உரியவாறாய் ஈதல் கடமை ஈயாதொழியின்
மருவ வேண்டும் பிறிதொரு பிறவி ஈதலுக்காக.

95. எம்குரு நாதர் ஆங்கிலக்கல்வி அனேகருக்களித்தார்
மந்திரம் கிரந்தம் மொழிக்கலை ஏழுகன்னியர்க்கும்
தன்பின் நாளையும் தத்துவக் கலைகளும்
உன்னத சீடர் தியாகராஜருக்கு உரைத்தும்.

96. தன்னை நாடிய முருகேசர் செல்விக்கு
உன்னத யோக நிலையும் ஈய்ந்தார்
மருத்துவம் பரமேஸ்வரனுக்கும் மயூரநாதனுக்கும்
தான் பெற்ற ஞானம் ஈசானருக்கும் தமியேனுக்கும்.

97. விசாலாட்சி அம்மையும் பார்வதி அம்மையும்
விசாலமாம் ஈசன் இணையடி சேர்த்தார்
வீசு ஒளி வட்டம் மங்கயற்கரசிக்கு
தேஜஸ் தோன்ற தாமளித்தாரே.

98. ஈசான சிவாச்சாரியார்க்கு ஈடிலா ஞானம்
நேசமுடனே மௌனமாய் ஊட்டி
சீலமும் தவமும் சிறந்திட குருக்கள்
'ஞான பிதா' என விளம்பினார் தாமே.

99. நந்தியின் சீடன் தானென உரைத்தார்
வந்தொரு சீடன் தியாக ராசரை
தன்பின் குருவாய் கடமை ஆற்றென
தன்பின் நாளையும் குறிப்பால் உணர்த்தினார்.

100. பூரணை நாளில் ஸ்ரீசக்கர பூசை
பூரண மாக நடுநிசி ஆயிற்றே
தரையில் கால்பட நடந்த சீடனை
விரையும் வாகனத்தில் பொன்னாலை அனுப்பினர்.

101. சித்தாந்தத்து சூட்சுமம் யாதெனில்
சித்தர்தம்பேறு சீறிய கர்மா
பற்றும் வகையும் *பாற்றும் வகையும்கற்று
உற்ற நற்சீடற்கு மாற்றும் செயலே.

102. தன்பின் நாளைக் குறைத்திட நினைந்து
தன்கண் மூடி கபாலம்வருடி மௌனமாயிருந்து
பூசனை புரிந்து பின்னர் சமாதி வருமிடத்து
பூசனை வருமென திருவடி நடந்தார்.

---

* பாற்றுதல் - விலக்குதல்

103. பதியாய் அமைவதற்கு அண்ணிய
பகல்சில முன்னே சமாதி நெறியை
பகரும்நூல் அதனை சீடர் கையில்
தருமாறு செய்த குருவருள் தானே.

104. குருவாய் இருதன் பதிக்கென்ற
குருமொழி கொண்ட நற்சீடர்
திருதிகழ் சமாதி பூசனையுடனே
திருநெறி ஓமம் அபிஷேகம் புரிந்தார்.

105. நற்குஞ்சரவர் தாழ்பணிந்த தன்மையினால்
உற்றதோர் சித்தாந்தத்து உட்பொருள்
பற்றிய கர்மா பாற்றிடும் வகையை
பற்றிய ஞானத்தால் ஆற்றுதல் அருளே.

106. சைவ சித்தாந்தம் தெளிந்த குருவாய்
கைதிரு ஞான சம்பந்தர் சிவபூசையிலே
சிவதரி சனத்துடன் திருவடி பூசைபுரி
தவ வலிமையாலே உபாயஞ் செப்பினார்.

107. உபாய குருவவர் இயம்பிய வகையும்
அபய குருவவர் இயக்கிய வாறும்
சிவய நமவென செப்பிய தாலும்
விளைந்த வினைதனைக் காட்டினார் தாமே.

108. தாமே வண்டியில் இவர்ந்து வந்து
தானே விழுந்த மருத மரமதைத் தம்பி
தானே முட்டிட நிமிர்ந்தது வண்டி
வானோர் வணங்கும் பதியை அடைந்தது.

109. தத்துவம் கடந்து நேராய் வந்து
மகத்துவம் கொண்ட தேரது வந்திட
மாட்டு வண்டியில் கருணை காட்டி
காட்டு வழியில் தோன்றினார் துணையாய்.

110. பந்த வினை தீர்க்கும் தன்மைமிகு தீர்த்தம்
கந்த புஸ்கரணியினை அந்தநாள் அமைத்து
உகந்த பூசனைகள் உரியவகை செய்து
வந்தவர்க்கு தீர்த்தமுதல் திருநீறும் அளித்தார்.

111. கந்தபுஸ்கரணி தீர்த்தமதை நிறுவிய பின் விதியே
சொந்தநிலம் தன்னதென வந்தொருவர் விளம்ப
வந்தது வினையெனவே விலக்கிய தாலே
வந்தது பொற்றாமரை வாவியெனும் தீர்த்தம்.

112. திருநிறை பூசையினை நிகழ்த்த மனம்கொண்டு
ஒரு குடத்தில் நிறைத்துவந்த பொற்றாமரை வாவி
திரு நிறைந்த தீர்த்தத்தில் உருத்திராட்சம் அமிழ்த்தி
ஒருவில்வம் அதில் தொட்டு சாற்றலே பூசை.

113. பாரிடர் தீர்க்கும் பக்குவமெய்திய
கிருபானந்தவாரியார் கூறிய வாக்கு
"ஞானியர் பூசைக்கு போதுமொரு வில்வம்"
ஞானி முருகேசரது காட்டிய வாறே.

114. ஏகவில்வம் சாற்றுதல் ஞானியரின் பூசை
பாக பக்குவங்கள் நியதியிலை பக்குவர்க்கு
நாக பூசணிக்கு வந்து வெள்ளை
நாகம் பூசிக்கும் நற்செயலைக் காட்டினார்.

115. நாகபூசணித்தாய் தேரில் வரு மகிமை
ராஜ கோபுரத்தில் எழுதி வைத்த யந்திரம்
தோச மவை போக்கியே மங்கல நாண் பூணுதலம்
நேச மிகு புத்திரபாக்கியம் ஈட்டிடலுமாம்.

116. மூன்று பத்தாண்டில் முனைந்தவை விடுத்து
தத்துவ மொன்றிய தவமே முனைந்தார்
எட்டாண்டு காலம் இயற்றிய தவத்தால்
மட்டிலா ஞானமும் மகிமையும் எய்திற்று.

117. மத்தகக் களிற்றை மதிச்சடை யோனை
மெத்த விரலுடை மீனாட்சி அம்மையை
உத்தம விதியுடை கோவிலில் வைத்தே
சித்தமென்றியே சிவபூசை இயற்றினார்.

118. நித்திய அக்கினி குண்டம் அமைத்து
சுத்தமாய் அமுது அதில் அர்ப்பணித்து
பத்தியாய் வந்தணை பத்தரை எல்லாம்
சுத்த மாக்கினார் ஓமாக்கினியால்.

119. 'ஓமப் புகை தீர்க்காயுள்' என செப்பியே
ஓமகுண்டத்தின் மேல் சிரசை பிடித்து
தாமதமின்றியே நயனதீட்சை தம்கர தீட்சை
ஓமாக்கினியை தீண்டிடு தீட்சை எமக்களித்தாரே.

120. ஆசாரம் அநுட்டானம் ஆஸ்ரம பூசைகளும்
தேவாரம் புராணம் தேனாம் திருவாசகம்
மாலையில் ஓதியே மகிழ்வார்கள் அன்பர்கள்
காலை வணங்கியிட கலங்காமல் காத்திட்டார்.

121. வீழி நிழலருகே மாலைப் பொழுதினிலே
வாழ நிழல்தந்த ஞானி அமர்வாரே
வீசுதென்றல் போல் பேசுமொழி எல்லாம்
பாசவினை போக்கும் பரம உபதேசமாம்.

122. காவல் தெய்வமாய் கபால மேந்திய
கோல வைரவரை கோயில்வைத்து கோயிலும்
கலச மொடுக்கிய காந்தி அஸ்தியும்
காவல் செய்திட விளைத்தனர் தாமே.

123. ஓதத்தகு மந்திரம் அரகர சிவசிவ
சோமசுந்தரம் என்றே போற்றினார்
ஆலவாயில் மீனாட்சி அம்மையை
சீல வகையில் அர்ச்சித்தாரே.

124. வைமுவடி சிதம்பரம் நோக்கி யென
தைரியமூட்டி தவநெறி காட்டி
உய்யும் வகையே இதுவெனக் காட்டி
செய்யும் பூசனை சிறப்பித்தாரே.

125. பட்டினத்தடிகள் பாதம் போற்றி
ஈடிய செல்வம்எலாம் எளிதாம் என்று
காட்டிய துறவறம் கூடிய தவம் முயன்றே
காட்டினார் அறநெறி பாட்டினில் தாமே.

126. இந்திய தேசம் இனிதே வருகென
இந்தியத் தலைவர்கள் கனிவாய் வேண்டிட
இரண்டு தேசமாய் எல்லை வகுத்ததால்
தாண்டிட வேண்டுமோர் கடவுச்சீட்டு

127. அன்றைய சட்ட ஒழுங்குகள் விலக்கி
தன்நிழற் படமின்றிய கடவுச்சீட்டுடன்
அன்று கடலைக் கடந்து தனிவிதிப்படியே
சென்றனர் இந்திய தேசம் மகிழ்ந்திட

128. உலகோர் நடைமுறை ஞானிக்கு வேறு
உவகை பொங்க அழைத்தற் கிசைய
காசி காயா யாத்திரை சென்றார்
அசையா பதிவு இது என்றாயிற்று.

129. அன்பின் வலைப் படுகின்ற அச்சுதனார்
மீனவன் வலைப் பட்டார் இடர்களைந்து
இந்திரன் அமர ருலகிற்கு மீண்டும்
பொன்னின் ஒளிர் விமானத்தில் ஏகவைப்பதற்காய்.

130. ஏழுதிரு வீதியுடன் எழில்பெருகு கோபுரமும்
நீளதிரு வடிநிலைவரை ஒளிவீசும் தீபமும்
சூழஎழில் பெருகு கோவிலையும் சூழ்ச்சியால் அழித்தனர்
வாழவழி தேடிவந்த * பூனைக் கண்ணர்.

---

* குளக்கோட்டு மன்னனின் திருமலைக் கல்வெட்டில் கண்டவாறு

131. சுற்றியுள சுற்றுமதில் சூழ்ச்சியுடன் இடித்தவர்
பற்றிய கற்களையே சங்கானை கொணர்ந்து
வெற்றிக் களிப்புடனே கட்டிய தேவாலயம்
உற்றவர்கள் யாருமின்றி கற்சுவராய் உளதே.

132. குளவியுரு எடுத்ததற்கு குந்தகம் செய்யவந்த
தலம்காத்த வைரவருக்கு அவர் அமைத்த
தலம்மின்றும் நித்திய நைமித்தியங்கள்
பலவாக அருள் சுரக்கும் நிலைகாணலாம்.

133. தலை வாயில் பிள்ளையாரும்
தலம் காக்கும் வைரவரும்
நலம் காக்கும் நாரணரும்
கலந் துறையும் பதியிதிலே

134. சீலத் திருவுடையார் திருவடியால் நடந்துவர
பாலைத் தருகின்ற பசுவின் உடல்மருவி மண்டியிட்டு
மாலையென கண்ணீரால் ஆசி வழங்கியிட
''நீயும் உதுக்குள்ள இருக்கிறதை காட்டுறியோ''

135. என்றே இயம்பியதால் ஏலவே கூடவந்தோர்
அன்றே அறிந்தனரே ஆவின் உடலெடுத்து
நன்றே வந்தவர் நாராயணன் என்று
சென்றே கைதொழுவோம் நலங்கொள் திருப்பதியை.

136. சைவர் அரசோச்சும் தேசம் நேபாளம்
சைவ துறவியர்கள் உறையும் நேபாளம்
சைவர் உருத்ராக்கம் விளையும் நேபாளம்
சைவர் அரண்மனையை அணைந்தார் குருநாதர்

137. காவி யுடையணிந்த புனிதர் தாழ்பரவி
காவி யுடையுடனே கம்பளியும் மெய்பரவினார்
நேச மனமுடைய மாமன்னர் மகேந்திரா தன்
தேசம் நேபாளம் சிறப்புடன் மிளிர்ந்திடவே

138. பெருந்தலைவர் ராசேந்திர பிரசாத் குருநாதர்
பெருந்தவமும் பேரருளும் பேறென எண்ணி
அருங் கொடையீதென ஆர்வ மேலோங்க
அவருங் கொடுத்தனரே அரியபுலித் தோலொன்று.

139. சந்தனம் கமழும் மைசூர் அரண்மனை
வந்தனர் சிவனை நெஞ்சினில் வைத்தவர்
வருவிருந் தினர்க்கு உபசாரம் பலசெய்து
பெருபுலி யதளை போர்த்தினார் அரசர்

140. பதித்த யந்திரத்தில் பதினொருநாட் பூசையினால்
பதித்த மந்திரத்துடனே விநாயகர் திருவுருவும்
மதித்த சீடருக்கு தாபித்துக் கொடுத்தனர்
கதித்த அருள்சுரக்க கணபதி அமர்ந்தாரே.

141. மன்மத வருடமதில் உன்னதமாய் குடமுழுக்கும்
தன்கைப் படஎழுதிய மூன்று பாவில் ஆசிகளும்
தன்னைத் தொழுவோரைக் காக்கும் கணபதிக்கு
உன்னதமான கோவில் கிழக்கினிலே குளமிருக்க.

142. ஆள் அடையாள அட்டை வழங்க
ஆட்களை பதிவுசெய் அலுவலர் வந்தனர்
நிழற்பட கருவின் கண்களிற்கு
நிழலுரு மறைத்து ஒளிப் பிளம்பானார்.

143. உருவ மெய்தி ஊரினில் வந்து
அரிய செயல்கள் ஆற்றிய பின்னே
உரிய வகையில் சாரூபமெய்திய
தரிசனம் உவகையில் தந்ததும் அருளே.

144. பொன் கூரையின் கீழ் பொன்னிறமான
கொன்றை அணிந்து திருநடமாடியை
பொன்னம்பலம் நீடூழி வாழ்கவென
தன்னம்பிக்கையினால் போற்றினார் தாமே.

**சமாதி** (1976)

145. மேடத்தில் சந்திரனாம் பரணி பெருநாளாம்
இடபத்தில் சூரியனாம் வைகாசி நளவருடம்
சீடர்கள் பூசிக்க ஈழத்து தவமுனிவர்
நீடித்த சமாதியிலே நிலையாய் உறைந்தாரே.

146. அறிந்தவை இயம்பினன் ஆற்றிலிவ்வளவே
செறிந்த தவமது செப்பிடல் எளிதிலை
சிறந்த அடியார் அறிந்துசீர் பெறவே
சிறந்த வழியென அறிவித்தேனே.

147. சரணம் சரணம் குருவடி சரணம்
சரணம் சரணம் திருவடி சரணம்
சரணம் சரணம் சிவனார் பாதம்
சரணம் சரணம் கணபதி பாதம்

148. சிவனடியார் வாழி சிவதொண்டு வாழி
அவனியுளோர் வாழி அறநெறியில் வாழி
தவநெறியோர் வாழி தரணியுளே வாழி
சிவநெறியே வாழி சிறந்தெங்கும் ஓங்கி.

# சமீபகாலத்தில் சமாதியில் நிகழ்ந்தவை...

- ''பொய் வேஷத்திற்கு மாலையிடும் பொய்யுலகம்
  மெய் வேஷத்திற்கு எறியுமடா கல்'' என்று
  நைய்ந்த மனத்துடனே சமாதியை நாடியவருக்கு
  மெய்யுறைந்த நிஷ்டையிலே அருளினார் தாமே.

- ரஷ்ய நாட்டு அன்பர் ஒருவர் சுற்றுலா வந்தவேளை எதேச்சையாக காரைநகர்வந்து சமாதிக்கு அண்மையில் வந்தார். அவ்வேளை சமாதியில் இருந்து வந்த அலைகளால் ஈர்க்கப்பட்டு சில நாட்கள் தனியே சமாதி அருகே தங்கியிருந்து அருள்பெற்று சென்றார்.

- மெய்யன்பர் ஒருவர் சமாதியை வணங்கச் சென்றவேளை வேலியும் படலைப்பூட்டும் தடுத்தன. நெஞ்சுருகி வேண்ட உள்ளே ஒரு பசு வடிவில் காட்சி தந்தார். அதை அலைபேசியில் படம் பிடித்தார். பின் ஊரவர்களை அழைத்து வந்து பார்த்தபோது பசு மறைந்துவிட்டது.

- ஊரவர் ஒருவர் ஆட்டிற்கு குழைவெட்ட சமாதிவளவு அருகே சென்றவேளை தாடியும் சடையும் கொண்ட உருவத்தில் ''நான் இஞ்சை இனி அடிக்கடி வருவன் நீ இனி வராதை'' என்றுவிட்டு காலடி நிலத்தில் படாமலே நடந்து சென்று மறைந்தார்.

## நிறைவாக...

சுவாமிகள் தனது அடியவர் குளாத்துள் எம்மையும் வைத்துள்ளார் என்பதற்கு சான்று பகரும் சம்பவங்கள்

குருநாதரின் ஆஸ்ரமத்தில் பல ஆண்டுகள் தங்கியிருந்து அதனைத் தவமாய்க் கருதி பணிவிடை செய்திருந்த அம்மை விசாலாட்சி இறுதிப் படுக்கையில் இருந்த வேளை தன்னிலையும் தவப்பயனும் இ·.து என்று உணராமல் அவையெல்லாம் தான் செய்த வினைப்பயன் என்று அல்லலுற்றிருந்தார். அடியனும் இ·. தெங்ஙனமென இடர்ப்பட்டவேளை தனதரும் குரலில் "Yoga is Siva; Karma is Siva" என எமது செவிகளிற் செப்பினார். எனினும் புரிந்துகொள்ள நான்கு ஆண்டுகள் சென்றன. கர்மா அற்ற பின் யோக நிலை கிட்டும் என அறிந்திருந்த எமக்கு யோகம் செய்தபின் கர்மா ஏதென விளக்கியவாறு ''யோகம் செய்வதற்கு முன் உள்ள கர்மா நீ கொணர்ந்ததாம். யோகம் பெற்றபின் வரும் கர்மா பிறரது : நீங்கலுக்காக உன்னிடம் வந்தது என்று அறி".

ஏதோ ஒருவரைப் போல் வளர வேண்டுமென அவாவுற்ற வேளை ('தும், தும்....') நீ, நீயாயிரு என்று ஹிந்தியில் கூறியதும் பின்னர் அது புத்தரின் சீடரொருவரின் மகா வாக்கியம் என்பதும் அறியப் பெற்றோம்.

தெய்வீகம் மிகுந்த எங்கள் குருநாதர் பாடல்களும் சமாதியும் எங்களால் பயனுற முடியாதுள்ளது எம் தவக்குறைவே அன்றி வேறொன்றும் இல்லை. எனினும் ஒன்றுக்கும் பற்றாத எம்மை ஏற்று அருளிய அவர் பாடல்கள் கிடைக்கவும் அவற்றைப் பாடி நல்லவர் ஈடேறவும் குருவருள் கிட்டும் என நம்புகிறோம்.

